[24th July 1964

SRI M. S. SELVARAJAN : Sir, in addition to the Collectors keeping the forms, will the Government consider the desirability of allowing the Educational Authorities to keep the forms?

THE HON. SRI V. RAMAIAH : It will be appropriate if the Collectors only keep the forms available, because they are in charge of disposing of the application forms for boarding grants.

சேலம் இரும்புக்கனி

* 686 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : } கனம் கைத்தொழில்
திரு. மீ. கலியாணசுந்தரம் : }

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் இரும்பு சம்பந்தமான M/S. M.N. தஸ்தூர் கம்பெனி (கல்கத்தா) அறிக்கை வந்துவிட்டதா?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துள்ள முடிவு யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :

(அ) இல்லை.

(இ) இந்த வினவுக்கு இடமில்லை.

திரு ப. உ. சண்முகம் : தஸ்தூர் கம்பெனி அறிக்கை இதுவரையிலும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் சேலம் இரும்புத் திட்டத்தை கைவிடப்போவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் உபயோகித்து இரும்பு உருக்காலை ஏற்படுத்தப்படும் என்று சொன்ன உறுதிமொழி எந்த நிலைமையில் இருக்கிறது? எப்படி விரைவில் ஏற்படுத்தப் போகிறார்கள்? மூன்றாவது திட்ட காலத்திற்குள் இதற்கான வேலை துவக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிர்வாகத்திற்குத்தான் சர்க்கார் பொறுப்பு. பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்ற செய்திகளுக்கு எல்லாம் சர்க்கார் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகைகளில் ஏதாவது வருகிறது என்றால், அது எப்படி வந்தது, அல்லது அது தவறு, அல்லது உண்மை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இந்தச் சர்க்காரைப் பொறுத்தளவில், தஸ்தூர் ரிப்போர்ட் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்குள் வந்து விடும் என்று தகவல் கிடைத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மத்திய சர்க்கார் அதைப்பற்றி பரிசீலனை செய்வார்கள். எந்த முறையில் சேலம் இரும்பை உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றிய பரிசீலனை முடிவு செய்யப்படும். சாதாரணமாக கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் ஃபர்னஸ் முறைப்படி உபயோகிக்க முடியுமா என்பதைப்பற்றியும், அதற்கான ஆலோசனைகளைப் பற்றியும் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

24th July 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டும், சேலம் இரும்பைக்கொண்டும், உருக்காலை ஏற்படுத்துவது சாத்தியம் என்று வெளிநாடுகளில் பரிசிலனை செய்தபோது தெரிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இப்போது இந்தத் திட்டம் சம்பந்தமாக தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்பவேண்டிய காரணம் என்ன? எது சம்பந்தமாக அவர்கள் பரிசிலனை செய்கிறார்கள்? என்ன அபிப்பிராயம் அவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக ஒரு பிராஜக்டை எடுத்துக்கொண்டால், முதலில் லாபரட்டரி டெஸ்ட் செய்வார்கள், பின்னால் பைலட் பிராஜக்ட் டெஸ்ட் செய்வார்கள், மூன்றாவதாக பிராஜக்ட் ரிப்போர்ட் செய்வார்கள். இந்த மூன்றாவது ஸ்டேஜை தான் தஸ்தூர் கம்பெனி செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு புதிய முறையில் இதை உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றியும் ஒரு தகவல் கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். உதாரணமாக இந்த விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது, ரா-லிக்னைட்டையும் உபயோகப்படுத்தலாம் என்றும் அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் விபரம் கேட்டிருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : அப்படி அனுப்புகின்ற அறிக்கையானது, அதன் பிரதியானது, மத்திய சர்க்காருக்கு கிடைக்கின்ற நேரத்தில் ஏக காலத்தில்—மாநில சர்க்காருக்கு கிடைக்குமா? அப்படி மாநில சர்க்காருக்கு கிடைக்குமானால் அதன் மீது மாநில சர்க்கார் தங்களுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அதற்குவேண்டிய தக்க நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாநில சர்க்காருக்கும் ஒரு பிரதி கொடுப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த பைலட் பிராஜக்ட் பற்றிய பரிசிலனை ஓரளவுக்கு முடிந்து விட்டதாக தெரிகிறது. இது இறுதியான கட்டம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இதில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சேலத்திற்கு கொண்டு வரப்படுமா அல்லது சேலம் இரும்புக் கனி நெய்வேலிக்கு கொண்டு வரப்படுமா? எந்த இடத்தில் இதற்கான தொழிற்சாலை ஏற்படுத்தப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்தபின் தான் தெரியும்.

திரு. வை. சங்கரன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட்டில், ஆந்திராவிலுள்ள பெல்லாரியில் கிடைக்கின்ற இரும்பு நல்லதாக இருக்கிறது, ஆகவே இந்த தொழிற்சாலையை அங்கேயே அமைக்கலாம் என்று சொல்லப்பட்டிருப்பதாக தெரிகிறது. அப்படி ஏதாவது

சொல்லப்பட்டிருந்தாலும், இதை உறுதியாக தமிழ் நாட்டில் சேலத்திற்கு அருகே தான் ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த சர்க்கார் வற்புறுத்துவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆந்திர மாகாணத்தின் நடவடிக்கைகளைப்பற்றி இந்த சர்க்காருக்கு தகவல் கிடையாது.

திரு. ஜெ. மாதா கவுடர்: ஸார், தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்பபட்டிருப்பது எந்த முறையில் தயாரிப்பது என்பதைப்பற்றி. இந்த ரிப்போர்ட் வந்ததும் சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக்கரியையும் கொண்டு தமிழ் நாட்டில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உறுதியாக சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்த பிறகு மத்திய சர்க்கார் தான் முடிவு எடுப்பார்கள். ராஜ்ய சர்க்கார் முடிவு எடுப்பது அல்ல.

ஊராட்சி மன்றங்களுக்கு கட்டிடம்

** 687 **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

திருச்சியில் கூடிய சேர்மன்கள் மாநாட்டில் ஊராட்சி மன்றங்களுக்கு ஆபீஸ் கட்டிடம் கட்ட அரசாங்கம் ரூ. 3,500 கடனுகவும், ரூ. 3,500 மானியமாகவும் கொடுக்க கோரும் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசாங்கம் சில தொகைகளை ஒதுக்க வேண்டுமென்றும், அவைகளுக்குக் கட்டிடச் செலவில் பாதியை மானியமாகவும், பாதியை நீண்டகாலக் கடனுகவும் கொடுத்து உதவ வேண்டுமென்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஷை தீர்மானத்தில் உதவித் தொகையின் அளவைப் பற்றி குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. ஷை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுதே பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக உதவி அளிப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வந்தது. ஆனல் தேசீய நெருக்கடி நிலைமை காரணமாக அதைத் தள்ளிப்போட வேண்டி வந்தது.*

மீன்பிடித் துறைமுகம்

** 688 **கேள்வி—திரு. நா. சௌந்தரபாண்டியன்:** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள லீபுரத்தை மீன்பிடி துறைமுகமாக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன?